உ

ஸ்ரீ ராமஜெயம்.

ஸ்ரீ ஆண்டாள் துணை.

3869

23 JUL 1926

# ஸ்ரீ ஆண்டாள்

## தோத்திரக் கீர்த்தனை.

இஃது

போளூர்த்தாலூகா, பெரியகரம் கிராமம்,

நாராயணசாமி தாஸன்

இயற்றியது.

மதுரை, வடக்குமாசிவீதி,

தென்மணி விலாசம் அச்சியந்திரசாலையிற்,

பதிப்பிக்கப்பெற்றது.

1926

0825:417
N26
175465

உ

ஸ்ரீ ராமஜெயம்.

# ஸ்ரீ ஆண்டாள் தோத்திரக் கீர்த்தனை.

## காப்பு.

சீர்பெறு வில்லி புத்தூர் தேவியாண் டாளின் மீது
பார்புகழ் கீர்த்தனைப்பாப் பாடலுக் குதவி செய்யக்
கார்நிற மாத வன்றன் கழலினுக் கடிய ரான
தார்புனை யாழ்வா ராதி சரணங்கள் காப்ப தாமே.

## அகவல்.

சீர்தரும் ஞான ஸ்ரீராமன் தேவி
கார்நிற மேனி கண்ணனைத் தழுவ
செந்தா மரையில் சிறப்புட னுதித்துச்
சிந்தா மணத்தாள் சீருடன் காத்து
அமுதக் கடலை அங்கியாற் கடைந்து
அன்பருக் குகந்து அமுத பளித்தாய்
எண்டிசை யோரும் எற்றித் துதிக்க
தண்டா மரையில் தண்டைக ளாட
பாதச் சிலம்பும் பலதொனி பாட
நாத கீதமும் நான்மறை யாட
போதஞா னத்தில் புகழ்ந்துனைப் பாட
காதலா வுன்னைக் காண வேண்டியே
பாத தெரிசனம் பாலனுக் களித்துப்
பாதத்திற் சேர்ப்பாய் பாவைக் கோதாய்
எற்றிப் பணிந்திட என்னு லாமோ
போற்றி வணங்கிடப் புண்ணியம் செய்தனே
அக்ஷரம் அனைத்தும் அடியனுக் குதவி
அக்ஷர வாசியில் ஆடிடும் அன்னையே

2037
23 JUL 1926

800 009.
5465

அஷ்டா க்ஷரத்தில் அமைந்த சத்தியே
இஷ்ட முடனே எனைநீ காப்பாய்
மாலன் தேவி மரகத ஸ்வரூபி
காலன் வந்தால் கடிந்திடுங் கபாலி
விருந்தா வனத்தில் வினைகெட வந்த
திருந்தியே செல்வியே தீனனை ஆள்வாய்
அகார உகார ஆனந்த சொரூபி
றீங்கா ரத்துடன் மூலத் துதித்த
கம்பத்தி லேறும் கனகரத் தினமே
நம்பும் அடியரை நல்வழி தருக
குண்டலி கனலைக் குறிப்புட னெழுப்பிக்
கண்ட வினையைக் கலங்கிட வெறித்து
பிருதிவியில் தோன்றும் பிரமன் சரஸ்வதி
நருந்துணை யாக நகார வெழுத்துடன்
அங்கனம் தோற்ற அடியேனுக் குதவி
நங்காய் யாண்டாள் நாரணன் பாரி
அப்புடன் இப்புவியில் அமர்ந்து நிற்பவளே
ஒப்புட னெனக்கு உகந்த மகாமம்
தெரிசனம் செய்ய தேவிநீ தருவாய்
பரிசுத்த னாக்கிப் பாதத்தில் சேர்ப்பாய்
சுடலையி லாடு முருத்திரன் சத்தியை
நடனசி காரங் கடவா தருள்வாய்
வாய்வும கேசன் மகேஸ்வரி தன்னை
தோய்ந்திட வடியன் தோஷத்தை நீக்க
வாக்காய் வகாரம் அமர்ந்திடச் செய்து
தேக்கா தெனக்குத் தெரிசனம் தந்து
நோக்கி யருள்வாய் நுண்மை ரட்சகியே
ஆக்கினைச் சக்கரத் தக்ஷரங் காட்டிப்
புருவமத் திபத்தில் பூரித்த சோதியைக்
கருவா யமர்ந்த கண்ணன் கேசனை
தருவாக நின்ற சதாசிவ மூர்த்தியை
அருவா யுருவாய் அகார மூர்த்தியும்
ஆறு தாரமும் அங்குள்ள நிலையும்
தேர்ந்திட வெனக்குத் தெரிசன மளிப்பாய்

பூரக கும்பக புகரேழ் சகத்தை
அருக்க னம்புலி அக்கினி மூன்றும்
இடகலை பின்கலை சுழிலையிற் சேர்ப்பாய்
திடவை ராக்யம் திடமாக அளிப்பாய்
தத்துவந் தொண்ணூற் றாறையும் நீக்கிப்
பத்தனு யாகிப் பாவியைக் காப்பாய்
சித்தத்தினுள்ளே செல்விநீ சேர்ப்பாய்
சத்தம் பிறந்திடச் சடிதியில் வருவாய்
வாத பித்த சிலேத்ம வருத்தமும்
வருந்தா வண்ண மருள்புரி தாயே
மும்மலச் சேட்டை முழுதும் நீக்கித்
தம்பனம் போல தம்பித்து நிற்க
ஏடணை மூன்று மென்முகங் காட்டி
மூடனை யாண்டிடல் முக்கியம் தாயே
ஒன்பது வாயும் மந்திரம் ஒன்றால்
அடைத்திட அனையே அறிவாக நிற்பாய்
நவக்ரக தோஷம் நாடாமல் காப்பாய்
நவகோண லட்சுமி நாரணன் பூவையே
ஈராறு காமனை இங்ஙனம் காட்டிப்
பாரினிற் பிறவாப் பதவியைத் தந்து
ஏகாட் சரத்தின் எழுத்தையுங் காட்டி
தாகத்தை நீக்கித் தருவா யமுதம்
முக்கோண வட்டத் தொளிவையுங் காட்டி
மோன நிலையில் முழுவரைக் கூட்டி
நாசி நுனியில் நடமிடும் தேவியே
மாசிலா மணியே மாணிக்க வொளியே
ஓங்கார ரகசியம் உள்ளொளிக் காட்டி
என்வினை இரண்டும் ஏகமாய் அறுத்து
இகபர போகத்தை இகழ்ந்திடக் காட்டி
பகலிரவு தன்னைப் பழுதற நீக்கி
சீராய்க் காராய் பாவை சீதையே
தாராய் வாராய் தயாபரி நீயே
ஸ்ரீயும் கிலியும் ஐயுமா னவளே
அவ்வும் உவ்வும் மவ்வுமா னவளே

Q25:4H7 N26 23 JUL 1976

சவ்வும் கிலியும் சையு மானவளே
இவ்வும் மவ்வும் வவ்வும் ஆனவளே
ஓங்காரத் துள்ளொளியில் உலாவிநிற் பவளே
அகர உகரத்தில் ஆடிடும் அன்னையே
மகார ஸ்வரூபி மாதாவும் நீயே
அச்சரம் அவ்விடத் தொன்றும தாகி
அஷ்டா க்ஷரத்தில் அமர்ந்து நிற்பவளே
பஞ்சா க்ஷரத்தில் பதிந்து நிற்பவளே
சடா க்ஷரத்தில் சமைந்து நிற்பவளே
ஏகா க்ஷரத்தில் எளியேனை யாள்வாய்
அக்ஷயந் தந்து அடியேனை யாள்வாய்
இக்ஷணம் வந்து இன்பமாய்க் காப்பாய்
சக்தி பீஜமும் சக்தியும் நீயே
பத்தியும் நீயே புத்தியும் நீயே
சித்தியும் நீயே செல்வியும் நீயே
கோதையும் நீயே பூதேவியும் நீயே
ஆண்டாள் நீயே ஆண்டவள் நீயே
கொண்டையில் பூச்சூடிக் கொடுத்தவள் நீயே
பாமாலை பாடிக் கொடுத்தவள் நீயே
ராமனை லிலங்கை தகித்தவள் நீயே
நவக்ர துவாரம் ஒன்பதும் நீயே
கவலை யகற்றும் காரணி நீயே
பூரணி நீயே ஆரணி நீயே
அரிஅரன் இந்திரன் ஆயனும் நீயே
பாரினில் பாரம் பரித்தவள் நீயே
திரிபுரம் எரிக்கச் சிரித்தவள் நீயே
பரிவுடன் பார்த்தனைப் பகுத்தவள் நீயே
சத்தும் நீயே அசத்தும் நீயே
சரமும் நீயே அசரமும் நீயே
அகமும் புரமும் அகண்டமும் நீயே
அகத்தில் ஜொலிக்கும் வல்லபை நீயே
நீர்பார் தேய்வு வாய்வும் நீயே
சப்ரமா காசம் ஜானகி நீதான்
அடியேன் செய்பிழை அனைத்தையும் பொருத்து

அடியே னுடைய உடல்பொரு ளாவியை
அனைத்தையும் உந்தன் அடைக்கலம் தந்தேன்
உனதிட லாவி பொருளையும் தந்து
இன்ப முடனே ஏழையைக் காக்க
இன்னமும் சொல்ல என்னு லாமோ
குருவும் நீதான் சீடனு யாக்கி
குருவும் தேசம் குறித்து நீ உரைப்பாய்
தந்தையும் தாயும் தாரம் தமக்கையும்
எந்தையே நீதான் ஏழைநான் சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
தருவே சரணம் தற்பரே சரணம்
நாரணி காரணி பூரணி சரணம்
அரவத்தில் துயிலும் ஆதியே சரணம்
கெருடன் மேல்வரும் கேசவா சரணம்
திருகுவி லாச திருமூர்த்தியே சரணம்
அக்ஷயா சரணம் அனுமந்தா சரணம்
அக்ஷரத்தில் உதித்த அன்னையே சரணம்
திருப்பாவை பாடிய திருவே சரணம்
சரணம் நாரணன் ஆண்டாள் சரணம். ஓம்.

---

கீர்த்தனை.

கணபதி துதி.

அருள்தரும் ஞான மருள்வழி பெருகும்
அருமையா மிதற்கீ டிலையாம்
உருமையாய்க் கண்டு உணருவார்க் கிந்த
வுலகமு மனந்தமுஞ் சித்தி
மருந்தெனச் சொல்லி மண்டலங் கொண்டால்
மறலியு மணுகிட மாட்டான்
சீருற வேண்டி சிவனருள் பாலன்
திருவடி தினந்துதிப் போமே.

---

இ-ம-கமாஸ்-தா-ம்-ரூபகம்

பல்லவி.

நடனமாடு மூலாதாரா திடமுனே யாமுந்திரா
விடமதையுண் டவன்பாலா சடைச்சியின் கெஜமுகசீலா

அநுபல்லவி.

சுடலையி லாடும் சத்தி சேயனே
சடலத்தை நீக்கி அருள்வாய் நேயனே (ந)

சரணம்.

சரிகை கிரிகை யோக ஞானமும்
அறிவாகி நிற்க வுதித்த மோனமும்
குறியுடனே அளிப்பாய் நீயே
குமரனுக்கு மூத்த சேயே
தரிகிட தத்தாம் தம்தறி
திரிகிட தித்தாம் திலாங்கென (ந)

அவ்வையர்க்கு அருள்புரிய அவ்வெனவே அகண்டவிரிய
உவ்வென வுதித்தபாலா மவ்வென ஆடியசீலா
ஒவ்வெனவே நாதம்பாட சிவ்வெனவே மயங்களாட
தகுமிகு தந்தரி நந்தரிதோம் தோம்
திகுமிகு சுந்தரி தீம்தரி தாம்தாம்
தளாங் குதாம் தளாங் குதை
தளங்களு மாட யிருவினை யோட (ந)

தசமுகனை மதமடக்கி தாசநாரணன் குறைநீக்கி
கெஜமுகனே யென்னைநோக்கி பாசபந்த மதனைப்போக்கி
நிஜசொரூப மதனில்தாக்கி வாசஞ்செய்ய அருளில்சிக்கி
முடியுடனே பிறவிநீக்கி அடியுடனே நமனைநோக்கி
சுடசுடென சோதில்தாக்கி கடகடெனக் காலைத்தூக்கி (ந)

## தாயார்பேரில் துதி.

இ-ம்-காம்போதி-தா-ம்-ரூபகம்.

பல்லவி.

முச்சுடரு மொருச்சுடரா யோங்கிநிற்கும் சேயேநீயே
இச்சமய மருளளிப்பாய் அஷ்டலக்ஷிமி தாயே
அடியேனை ஆதரி நீயே (மு)

அநுபல்லவி.

அச்சுதனு மரனயனும் மெச்சும்படிக் குதித்ததாயே
வாணியும்நீ சத்தியும்நீ பூரண லக்குமிநீயே

சரணம்.

திரிமலத்தை நீக்கியெந்தனை
திரிசூலத்தி லாள்வாய்வந்தனம்
திரிபுர தகனசுந்தரி கரிராஜன் தேவிசவுந்தரி
பரிபூரண மானநிறந்தரி பாலகனைக் காப்பாய்ந்தரி (மு)

அரக்கர்பூண்டைக் கிள்ளிக்கடைய
நரலோகத்தி லுதித்ததாயே
காளிகௌரி மனோகரி நீலிசௌரி கிருபாகரி
சூலிசுகுண சடாச்சரி ஆலிஅடி யேனையாதரி (மு)

கடல் கடைந்து அமுதமாக்கிக்
குழந்தைகளைக் காக்கநோக்கி
படந்திட பசுபதிஆவி இருந்திட சேயன்கூவி
பறந்திடும் பாலன்பாவி கறந்திடு பூலையைத்தாவி (மு)

நாராயண சாமியைநாடி
நேராயுந்தன் பதியுடன்கூடி
பூரணசாட்சிநீயே ஆரண ரூக்ஷிநீயே
காரண காக்ஷிநீயே கருணைவைத் தாளுநீயே (மு)

பெரியகரம்.

அரியொடு அயனுட னரனருள் முருகனும்
ஆகுவா கனனும் வருக
அமரர்கள் சித்தர்கள் ஆனந்த மாகவே
அன்னைமுன் விளை யாடிட
அகலும்வல் வினையெலாம் அன்னையின் கிருபையால்
அறிவாகி யுதித் தருளவும்
அருள்தரும் நன்னகர மென்னுஞ்சிறு விண்ணகர
மானதொரு பெரிய கரமே.

## ஸ்ரீ ஆண்டாள்போரில் தோத்திரம்.

ஆண்டிப் பண்டாரம் என்ற மெட்டு.

பல்லவி.

ஆண்டாள் சிங்காரி . என்னை
யாளுஞ் செய்பிரி (ஆ)

அநுபல்லவி.

தண்டை சிலம்பு கொஞ்சும்
ஜானகியாய்நீ விளங்கும்
அண்டாதிதேவர் போற்றும்
அருட்சுடராய்நீ துலங்கும் (ஆ)

சேவை தெரிசனமே
செய்யபரமா னந்தம்
ஆவலாயோடி வந்தேன்
அஞ்ஞானத்தைப்போக்கிடுவாய் (ஆ)

சூடிகொடுத்த வளே
சுழிமுனையில் நின்றவளே
பாடி பருளுந் தந்தாய்
பாலகனைப்பதத்தில் சேர்ப்பாய் (ஆ)

அஷ்டா க்ஷரமறியேன்
அடிதொழுகும் விதமறியேன்
இஷ்டம்வைத் தென்வினையை
இன்பமுடன் நீக்கிடுவாய் (ஆ)

சீர்பெருகும் பெரியகரம்
சிறப்புடனே யோங்கிநிற்க
பார்புகழ நாராயண
தாசனை நீ ஆண்டிடுவாய் (ஆ)

## சற்குருபேரில் தோத்திரம்.

கல்லார்க்கும் கற்றவர்க்கும் என்ற மெட்டு.

இ-ம்-கேதரம்-தா-ம-ஆதி.

அருள்வடிவாய் உபதேச மளித்திட்ட குருவே, அடியேனின் னுவிபொரு ளுடல்மூன்றுந் தந்தேன், அருள்பெருக அருள்சுரக்க அருள்புரிவாய் தருவே, படிந்திடாமற் பாழ்நரகிலிப் பாவியைநீ காப்பாய், இருள்பெருகி இருமாந்து யிருந்திடாம லறிவை, வடிந்தென்பால் வாழ்வுபெற தருணமிது தருவே, திருவுருவே திகழ்குருவே தேடொணாதென் மருவே, அடிபணிந்தே னுதரிப்பா யிடர்தீர்த்த பதியே.

சற்குருவே மெய்க்குருவே போதமயக் குருவே, திருவுருவே தினமருவே தேனிந்தக் குருவே, சொற்குருவேசுகக்குருவே சுகத்தி லாடுங் குருவே, அருளுருவே அருள்தருவே அருள்புரிந்த குருவே, தற்குருவே தனிக்குருவே தனிமயமாங் குருவே, கருவுருவே கன னெனவே கனகத்தினொளி குருவே; நற்குருவே நருங்குருவே நாதாந் த நகர்க்குருவே, இருதாள்பணிந் தேனைதரிப்பாய் மெய்ஞ்ஞான பதியே.

இன்புருவ இன்பமற இன்பந்தந்த குருவே, தங்கிநிற்க நிழல் காணேன் தருணம்நிழல் தருவாய், பண்டுருகப் பழவினைகள் படிந் திடாமற் பழுக்க, சங்கைகெட்டு அங்கம்விட்டுச் சத்திகெட்டு நிற்க, உன்பருக்கு உலமகிழ்ந்து உருக்கிவிடுந் தருவே, உனதடிமை கடைத் தேறவுங் கடனீ தலவோ, அன்பிலுரு மமுதகலை அருந்திடுமென் றளிப்பாய், அடிபணிந்தே ஞைதரிப்பா யிடர்தீர்த்த பதியே.

அதுவென்று லதுவாகும் அருட்சோதி தெய்வம், சச்சுதாநந்த பரம் சாக்ஷியது தெய்வம், அதுவென்று வஸ்துவது அருளான தெய் வம், இருளருக்கு மிடர்தீர்க்கு மெங்கள்குல தெய்வம், அனங்கன்தச் சனையுமன லாலெரிக்குந் தெய்வம், பிறப்பிறப்பைப் பெருங்கனலால் கொண்டெரிக்குந் தெய்வம், அம்புலியு மருக்கனையு மாட்டிவிடுந் தெய்வம், அடிபணிந்தே ஞைதரிப்பா யிடர்தீர்த்த பதியே.

அம்பதியா லம்பலத்தி லாடுவதும்நீயே, உம்பர்பலரிஷிகள்சித்தர் போற்றுவது நீயே, மம்பரமா யனுதியாக அமர்ந்தசுடர் நீயே, சம்ப மதி லுமையவளுங் கருதுமுண்மை நீயே, சிம்மெனவே சிவன்மூவர் செப்புவது நீயே, அம்பரமா யப்புமூப்பு மமர்ந்ததுவும் நீயே, தம்ப னமாய்த் தவம்புரியு மொன்மந்திர நீயே, அடிபணிந்தே நாரணன்பா யிடர்தீர்த்த பதியே.

நாமாவளி-இ-ம் சங்கராபரணம்.

ஆண்டாள் மலரடி தொழுவோம் தொழுவோம்
அவளடி யாருடன் சேர்வோம் சேர்வோம்
ஆரியர்க ளடியி லாழ்வோம் ஆழ்வோம்
அவனியிற் பிறவாதினி வாழ்வோம் வாழ்வோம் (ஆ)

நாமாவளி-இ-ம்-ஆனந்தபைரவி.

பரமா னந்தம் பஜகோ விந்தம்
வரவா அந்தம் வைதேகிதன் சொந்தம்

நித்தியா னந்தம் நிறைஞ்சன கந்தம்
பக்தி புரிபவர்க்குப் பரமனுஞ் சொந்தம்
கோஷ்டிக ளுடனேசேர் வோமே இனி
கோவிந்தம் போடச்சொல்லித் தொழுவோமே
தாஷ்டிக மாகவே துணிவோமே நாம்
தரணியில் பிறவா தினியிருப் போமே
திருத்துழாய் தீர்த்தங்க ளருந்துவோமே நாம்
தீவினை களைப்போட் டெரிப் போமே
வரவர முனிவரைத் துதிப்போமே நாம்
பரமப தத்துக்கினி சேர்வோ மே

இ-ம்-காம்போதி-தா-ம்-ரூபகம்.

பல்லவி.

கருணை செய்யத் தருணம் தருணம்
கரிவரத ராஜனே ராமா (கரு)

அநுபல்லவி.

திருவுருவா யவதரித்த
தீரா வுதாரா கெம்பீரா கிருபாகரா (கரு)

சரணம்.

மூவுலகுமுண்டு ரக்ஷித்த மூலாதாரப் பொருளே யெந்தன்
நாவினால் துதித்தேத்திப் பணிந்திட நல்லவரமருளே
அம்பரமளந்தபாதா அடியேன் மீதினின்னம் வாதா
கம்பத்திலுதித்த கியாதா கரிவரதா காக்கொண்ணுதர்
மலர்ப்பாதா அருள்தாதா முடிவேதா இன்னம்வாதா (கரு)
மஞ்சக்குளத்தி லாண்டுரக்ஷிக்க அருகில் நின்றவனே உந்தன்
தஞ்சமென்று தானடைந்தவர் நெஞ்சில் நிறைந்து நின்றவனே
பஞ்சுயென்ற நமனுக்கஞ்சி நஞ்சிநஞ்சி நாரணன் மிஞ்சி தஞ்சம்
தஞ்சம்யென்று கெஞ்சி அஞ்சேல் அஞ்சேல் யென்றேன்கேசி
ஆதரிசீலா யெனை யருளோலா கோபிகாலீலா வேணுகோபாலா (க)

இ-ம்-சுருட்டி-தா-ம்-ஆதி.

பல்லவி.

சந்த்ர னுதயமாச்சே—ராமச்சந்த்ர னுதயமாச்சே

அநுபல்லவி,

மந்திர கிரியில்நின்று
யெந்த மிதவும்நன்று (ச)

சரணம்.

பிறையிளஞ் சூரியன் தரைதனி லாரியன்
மறைபொருள் காரியன் பறைதிரள் வீரியன் (ச)
காருணை தருள் பெருக்கி தாருக இருள்சுருக்கி
கோருதை மருள்சுருக்கி கேருக நாரணனுக்கு (ச)

இ-ம்-தன்யாசி-தா-ம்-ஆதி.

பல்லவி.

எத்தனைநாள் செல்லுமோ
மனமிரங்கி யருள்பாலிக்க

அநுபல்லவி.

பக்த்தனுகவும் பாவி பாரினில்ப்றவாதே போனேன்
சித்தம்வைத் தனைச்சேவிக்க சித்தம் தெளிவுங்காணேன் (எ)

சரணம்.

சத்வகுணத்தோனுக்கு சாலோக மளிப்பதாலே
கர்த்தனே இதுதகாது பின்சொல்வே னுண்மைதானே (எ)
சத்வமில்லா தோனுக்கு தாமதம் ரஜசுநீக்கி
பத்தனுயாக்கி உந்தன் பாதத்தி லெனையேசேர்க்க (எ)
காசனே காயாம்புவர்ண லோசனே மனவாசனே
தாசனே தசரதன்தன் போசனே ஜானகிநேசனே (எ)
ஈசனே மன்றுளாடும் வாசனே ரிஷிகேசனே
நேசனே நாராயண தாசனை ஆம்பாசனே (எ)

இ-ம் சங்கராபரணம் தா-ம் ஆதி.

பல்லவி.

நாதமும் பாடுது கீதமும் கேள்க்குது
பாதத்தைக் கண்டிட பாதையும் சிக்குது

அநுபல்லவி.

நாதத்தி லாடிடும் வேதத்தில் பாடிடும்
நாதனேதவ போதனே தேவனேதேவர் கோனே (நா)

சரணம்.

கரணங்களையொடுக்கி காலால்வரவுமே தோணேன்
பரனேபரந் தாமனே பன்னக சயனனே (நா)
விதியது மறிந்திலேன் மதிதனையோர்ந்திலேன்
கெதியேதுங் காண்கிலேன் பதியென்றுந் தெரிந்திலேன் (நா)
பூரணு தனிகாரணு வாரணு பணிஆரணு
தாரணு சுரகாரணு பாரணு துளசாரணு (நா)

175465
600 008

பொருளது காண்கிலேன் மருளதில் சிக்கினேன்
தருணம் தயைபுரிவாய் நாரணனுக் கருள்வாய் (நா)

இ-ம் முகாரி தா-ம் சாப்பு.

பல்லவி.

நாரணன் செயலெப்படியோ அறியேன்

அநுபல்லவி.

காரணமான நற் கடவுளைத் தொழுதிட
பூரண மனதாகச் செய்புமோ காண்கிலேன் (நா)

சரணம்.

மாதா மோகத்தில்சிக்கி மாண்டிட செய்வாரோ
சாதனை செய்வோரைச் சார்ந்திடச் செய்வாரோ (நா)
பாவியாக யென்னை திரிந்திடச் செய்வாரோ
தாவிப் பெரியோரை சார்ந்திடச் செய்வாரோ (நா)
மோகத்திலே சிக்கி மூடனாய் விடுவாரோ
தாகத்தை நீக்கி தாளடியில் சேர்ப்பாரோ (நா)
நறுமலரெடுப்பரை தூஷிக்கச் செய்வாரோ
நாரணனீ வாவென்று கைக்காட்டி யழைப்பாரோ (நா)

இ-ம்-ஆனந்தபைரவி-தா-ம-ஆதி.

பல்லவி.

பார்ப்பாய்நீயே கருதி பார்ப்பாய்நீயே
கண்ணன் சிங்காரத்தை (பா)

அநுபல்லவி.

நீர்வாணம் பூமிமுதல் வாய்வுஅக்கினி யொன்றும்
கார்வண்ணன நிரந்தரமாய் கனல்கதிர்போ லொலிக்க (பா)

சரணம்.

தருவாக அமர்ந்திட்ட தயாபர தயாநிதியை
குருவாக வாசில்நின்று கூசாம லனுதினமும் (பா)
சிலுசிலு சிலுவென்று சோதிசொலிப் புடனே
கலகல கலவென்று சிலம்புசத் தமுடனே (பா)
வாசியைப் பிடித்தடைத்து தேசிகனைத் துதித்து
கூசிடாநிலை யில்வைத்துக் குறிப்புடனே துதித்து (பா)
சந்தேக மறவேநின்று பந்தங்களற வேநின்று
சிந்தாதே மனதில்நின்று நாரணன் சொல்லேநன்று (பா)

இ-ம் எதுகுலகாம்போதி தா-ம் திருபுடை.

பல்லவி.

என்னநான் செய்வேனப்பா
எவ்விதமண் மேலுய்வேன்

அநுபல்லவி.

தென்னரங் கேசனை நித்தம் தெரிசிக்க
தெரிசிக்க மனதொடுங்கக் காணேன் (எ)

சரணம்.

பதறுவனென்று யெண்ணி பாஷத்தைக் கொண்டுபாவி நமன்
பற்றுவான் சுற்றுவனே பாபநாசனே மனமடக்க (எ)
இந்திரியங்களை யொடுக்க தந்திரமொன்று தோணேன் ராம
சந்திர யிதுகள்நீக்க மந்திரமொன்றுந் தோணேன் (எ)
கல்லைப்பெண் ணாகச்செய்த வில்லனே யிதுதகாது எந்தன்
சொல்லிலலா மடக்கவுந்தன் வல்லையோ மனதுசற்றும் (எ)
பேய்பிடித்த நாரணனுக்கு நாய்போல் அலையும்நெஞ்சை சுரைக்
காய்போல் அறுத்துக்கொட்டி தீயிட்டுயெரிப் பாய்மெய்யா (எ)

இ-ம் நீரசங்கராபரணம் தா-ம் ஏகம்.

பல்லவி.

மச்சகூர்ம வாமனா—ராமச்சந்த்ரா ஓம்அரி

அநுபல்லவி.

அச்சுதானந்தரே ஆனந்தநாதரே அண்டிவந்தேனுந்தனை
ஆதரிப்பதுன் பாரம் சொன்னேன் (ம)

சரணம்

அன்னைலக்ஷிமி தன்னை அன்றுதரித்த பதியேபதியே
தாசன்நாரணன் தினமும்பணிந்து வந்தடைந்தேன் வினையைத்தீரும்

இ-ம் காம்போதி தா-ம் திருபுடை.

பல்லவி,

மதிமயங்கி மையல்கொண்டு மாதர்மோகத் தில்மாண்டு
கெதியறியா மல்கெட்டு கேசவனடியை விட்டு (மதி)

அநுபல்லவி.

கதியிது யென்றுபண்டு கன்னியர் முலையைக்கண்டு
மதிதனிலுன்றுதுபட்டுமரவியையுதைப்போனைவிட்டு (மதி)

சரணம்

அஷ்டமதங் களைப்பெருக்கி இஷ்டவேசைக் குள்சிக்கி
கஷ்டத்துக்குள் காதல்தாக்கி அஷ்டமிரண்டும் தன்னைநீக்கி
தாசியின் மேலாசைபித்து காசுயென்ற மோகம்வைத்து
வாசிவரும் வழியடைத்து நாசிதனை பேற்றநாத்து (மதி)

காரியர்மே லிச்சைபேசி வூரிலெப் போதும் வீசி
ஆரியர்பா தத்துத்தூசி காரியத்தில் தினமும்பூசி (மதி)
மதியமுர்த முன்னதூண்டி பதியெனும் குருவைவேண்டி
சதியெனவே யென்றுமொண்டி ததிமிதோமெனவேதாண்டி
வேணுகோ பாலன்பதம் மாநுமது ரையில்நிதம்
தானுயாட் கொள்ளசதம் ஆளாய் நாராயணனைநிதம் (மதி)

இ-ம் நாதநாமகிரிகை அடதாளம்.

பல்லவி.

அஞ்சாதே தஞ்சம் செய்மனமே— அரி
நாம ஸ்மனனம் செய்தினமே (அ)

அநுபல்லவி.

கொஞ்சமாய்க் கையைவிட்டு கோபாலன் மலர்தொட்டு
சஞ்சலமென் பதைவிட்டு சாரங்க னட்சரமெட்டு (அ)

சரணம்

ஜென்மமரணம் தீர்க்க ஸ்ரீரங்கன் றருளிக்க
கன்மவினை கருக்க கரிராஜனைச் சேவிக்க (அ)

மானு மதுரைதனில் தேனுயமுர் தம்பாயும்
வேணுகோபால்பாதம் காணநாரணன் தினம் (அ)

இ-ம் காப்பி தாம் ஆதி.

பல்லவி.

நீமலேக்காதே—மனமே
நீமலேக்காதே

அநுபல்லவி.

மானிலம் தன்னில்கெட்டு மாதர் மோகத்தில்பட்டு
போம்போ தறிவுகெட்டு பூமகள் நாதனைவிட்டு

சரணம்

ஆட்டுவாள் பூட்டுவாள் அபரஞ்சி யால்மினுக்கி
தீட்டுவாள் காட்டுவாள் மெண்ணெய்யால் தளுக்கி (நீ
கட்டுவாள் பட்டினுல் வேசியாள் குளிக்கி
தட்டுவால் கொட்டுவாள் கன்னியாள் சிருக்கி (நீ)
போற்றுவாள் சாற்றுவாள் பூவை யாள்வணங்கி
தேற்றுவாள் தூற்றுவாள் தேவரடியாள் இணங்கி (நீ)
நத்துவாள் கத்துவாள் நாரியால் பெருக்கி
பற்றுவாள் சுற்றுவாள் பாவையால் நெருக்கி நீ)
பத்தியாய்ச் சுத்தியாய் நித்தமும் போற்றி
கத்தனை அநுதினம் கண்டிட யேற்றி (நீ)

கூத்துவன் சாத்துவான் கோபத்தால் பிணங்கி
பற்றுவாய் நாரண பலராமனை யிணங்கி (நீ))

## மஞ்சன்குளம் ஆண்டாள்பேரில் துதி.

இ-ம் கமாஸ் - யேகதாளம்.

பல்லவி.

ஆண்டா ளெனு நருந் தெய்வமே
ஆண்டருள்வாய் குலதெய்வமே (ஆ)

அநுபல்லவி.

அண்டிவரு மன்பர் தனை தொண்டுசெய்ய அருள்புரிவாய்
கண்டமல ரணிந்தாய் கண்டவினை தனையெரிப்பாய்

சரணம்

பா மாலைசூடிக் கொடுத்த வளே
பூ மாலைசூடிச் சமைத்த வளே
கா மாலை வருகா வண்ணம்
தேன் மாலை கொடுத் தருள்வாய் (ஆ)
தசநாடிகளை யொடுக்கி தாசர்களைச் சேர்த்திருக்கி
கசமென்னும் பந்தங்களை காய்ச்சிடுவாய் அனல்தனிலே (ஆ)
சூலம்கொண்டு வரும்வேளையில் காலம்கண்டு வதைப்பாயுயிர்
சாலவும்நான் பூசைசெய்ய பாலகனைத் தழுவாய்மெய்யே (ஆ)
சீர்பெருக மஞ்சன்குளம் கார்பெருகி சென்னிலோங்க
பார்சிறக்க நாரணனுக்கு தேர்தனிலே அருள்புரிவாய் (ஆ)

இ-ம் கமாஸ் - யேகதாளம்.

பல்லவி.

வாசிகேசவா மூல வாசிகேசவா

அநுபல்லவி.

வாசிவாசிவா மூலவாசிவாசிவா
காசினியி லுன்னைத்தேடி
பாசமற வேகாடி
தேசிக னுடனேகூடி (வா)

சரணம்

இடகலை பின்கலையில் ஈரா றுகாலைக் கட்ட
பாரசுழியா முட்ட நேராய்வருமுன்கிட்ட (வா)
சோதிசுட ராடும் குண்டலி கனலாமே
பண்டுவினைகள் போமே தொண்டு நாரணனாமே (வா)

## ஆனந்தக்களிப்பு.

இ-ம் நாதநாமகிரிகை தா-ம் சாப்பு.

பல்லவி.

அரியென்று அநுதினம் நாடு அவன்
அறிவுக்குள் ளறிவாக அமர்ந்திடத் தேடு
ப்ரியை யனுதினம் கூடு பரமன்
பரியேறி பாதையில் பாவிக்கப் பாடு (அ)

1546

இச்சையை யொழித்து நீதேறு அந்த
இச்சையை யொழித்திட்டால் காணலாம் ஊறு
தச்சனுந் தரணியைப் பாரு கால
தச்சனை வென்றிட யிதுநல்ல சிறு (அ)
எட்டையு மிரண்டையும் கூட்டு ராமன்
எட்டிக்கிட்டிவர இதுநல்லபூட்டு
கொட்டு முழக்கத்துடன் நாட்டு கையை
கொட்டித் தட்டிப்போனால் பாக்கலாம் சிட்டு (அ)
பார்த்தால் இனிக்கு மருந்து மனம்
பற்றற்று நின்று நீ பார்த்து அருந்து
தத்தித் ததும்பிக் கொண்டிருந்துஎங்கும்
தத்திக் குதிக்குமங்கே கூடியருந்து (அ)
சின்மயமென் றிதைக் காரும் நடுவே
சின்மயப் பொட்டுபோல் சிவக்குநீ பாரும்
தன்மய மென்றிதைச் சேரும் பரமன்
தன்மய மாகவே கூத்தாடு வான்பாரும் (அ)
மஞ்சநகர் தனில் வாழும் அந்த
அஞ்சல் வண்ணனை பதியென்று தொழும்
வஞ்சநமன் வாரா நாளும் நாரணன்
தஞ்சமென் றெந்நாளும் சார்ந்துநீ தாழும்

## வெண்பா.

கோதை பிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடந் தோன்றுமூர்—நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதுமூர்
வில்லிபுத்தூர் வேதக்கோ னூர்.
பாதகங்கள் தீர்க்கும் பரமனடி காட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரே
வையம் சுமப்பதுவும் வம்பு.

## வாழி விருத்தம்.

திருவாடிப் புறத்திற் ஜெகத்துதித் தாள்வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்புதூர் மாமுனிக்குப் பின்னாள் வாழியே
ஒருநூற்று நாற்பத்து மூன்றுரைத் தாள்வாழியே
உயரரங் கர்க்கேகண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாருந் திருமல்லி வளநாடு வாழியே
வண்புதுவை நகர்கோதை மலர்ப்பதங்கள் வாழியே.

முற்றிற்று.